**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXV of Bharatiya Nagrik Suraksha Sanhita 2023)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.2, SALEM.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**Judicial Magistrate No.II, Salem.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | | CC. No. 461/2023 |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Court | PW : 1 (LW: 1)<br>DW : |
| Name: | | திரு. ரமேஷ்பாபு |
| Father's/Husband Name: | | த/பெ. ராமச்சந்திரன் |
| Village: | | |
| Taluk: | | |
| Age: | | |
| The Oath was administered to the witness by Mr. Satheesh, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 28.01.2026. | | |

Accused Present. Learned APP Mrs.Punitha present. Counsel for the accused Mr. S.Murali present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 02.30 PM.**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது சன்னியாசிகுண்டுவில் குடியிருந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பமும் ஆஜர் எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். **புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. கடந்த 01.07.2022 ஆம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டு சன்னியாசிகுண்டு பகுதியில் வந்தபோது ஆஜர் எதிரிக்கும் எனக்கும் சிறிய வாய்த்தகராறு ஏற்பட்டது. அந்த சம்பவத்தின்

போது நான் கால் இடறி கீழே விழுந்தபோது எனது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் தகவல் கொடுத்ததன் அடிப்படையில் போலிசார் என்னிடம் மருத்துவமனையில் ஒரு தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. போலிசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதை இந்நீதிமன்றம் ஏற்று சாட்சியை இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 154ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி வழங்கியது.**

2. கடந்த 01.07.2022 ஆம் தேதி இரவு 07.30 மணியளவில் சன்னியாசிகுண்டு மெயின்ரோடு செல்வா நகர் சுண்ணாம்பு சூளை அருகில் தான் போய்க்கொண்டிருந்தபோது தனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் வேகமாக ஓட்டி வந்து தனது ஆட்டோவிற்கு முன்னால் குறுக்கே நிறுத்தி இறங்கி வந்து தன்னிடம் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், இப்படிதான் வேகமாக ஆட்டோவை ஓட்டுவாயா என்று கையால் தன்னுடைய முகத்தில் குத்தியதாகவும் அதனால் தனக்கு வலது கண் புருவத்தில் இரத்தம் வந்ததாகவும், அதனால் தான் நிலைதடுமாறி அருகில் இருந்த சாக்கடையில் விழுந்துவிட்டதாகவும், அந்த நபர் தன்னை பார்த்து கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், பின்பு சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது புகார் வாக்குமூலம் அளித்ததாக போலிசாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் தெரிவித்தார்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்: 02.35 PM**

Taken down before me in Open Court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- J. Dhinesh Kumaran
Judicial Magistrate No.II, Salem.